தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tanu.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாட்டில் எள் விலை சீராக இருக்கும்

இந்தியாவில் எள், முக்கிய எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றாகும். சீனா, ஹாலந்து, அமெரிக்கா, ஜெர்மனி, துருக்கி, நெதர்லாந்து, ஹாங்காங், இஸ்ரேல் மற்றும் ஐக்கிய அரபு நாடுகளுக்கு இந்தியா எள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. உலகில் சீனாவும், இந்தியாவும் எள் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன. இந்தியாவில், 2012-13 ஆம் ஆண்டு கரீப் பருவத்தில் எள் உற்பத்தி 3.40 இலட்சம் டன்களாகும். இது 2011-12 ம் ஆண்டில் சுமார் 4.20 இலட்சம் டன்களாக இருந்தது. உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், ஒடிஸா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் எள் அதிகளவில் பயிரிடப்படுகிறது. இந்தியாவின் கிழக்குப் பகுதிகளான மேற்கு வங்காளம், ஒடிஸா, அசாம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சிவப்பு மற்றும் கருப்பு இரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. மகாராஷ்டிரா மற்றும் இதர மேற்கு மாநிலங்களில் வெள்ளை எள் பெருமளவில் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் எள் பயிரிடப்படும் பரப்பு 0.63 இலட்சம் எக்டர் ஆகும். இதிலிந்து 0.31 இலட்சம் டன் எள் உற்பத்தி செய்யப்படுகிறது. எள் உற்பத்தித் திறன் எக்டருக்கு 506 கிலோ ஆகும். ஈரோடு, விழுப்புரம், தஞ்சாவூர், கரூர், கடலூர், தூத்துக்குடி மற்றும் சேலம் ஆகியன எள் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். மேலும் இந்தப் பகுதிகளில் எள் பயிரானது, தைப்பட்டம் (ஜனவரி முதல் பிப்ரவரி வரை) மற்றும் ஆடிப் பட்டம் (ஜுலை முதல் ஆகஸ்டு வரை) ஆகிய இரண்டு பருவங்களில் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் டி.எம்.வி 3,4,5,6,7 (சிவப்பு எள்ளு), கோ1 (கருப்பு எள்) எஸ்.வி.பி.ஆர்.1 (வெள்ளை எள்ளு) ஆகிய முக்கிய இரகங்கள் பயிரிடப்படுகிறது. டி.எம்.வி,3,4,5,6,7 (சிவப்பு எள்ளு) பெரும்பாலும் எண்ணெய்த் தேவைக்காக பயிரிடப்படுகிறது. கோ1, கருப்பு எள்ளு இரகங்கள் மிட்டாய் போன்ற இனிப்புகள் தயாரிப்புக்கு அதிக அளவில் பயன்படுகிறது. எஸ்.வி.பி.ஆர்.1 (வெள்ளை எள்ளு இரகங்கள் ஏற்றுமதிக்குப் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் மொத்த வரத்தில் 75 சதவீதம் சிவப்பு எள்ளாகும். மீதியுள்ள வெள்ளை எள், ஏற்றுமதி மற்றும் அடுமனை தயாரிப்புப் பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது. எண்ணெய் ஆலையாளர்கள் ஜுலை முதல் செப்டம்பர் வரை கர்நாடகா மாநிலத்தில் இருந்தும், நவம்பர், டிசம்பர் மாதங்களில் குஜராத் மற்றும் மத்தியபிரதேசத்தில் இருந்தும், ஜனவரி- பிப்ரவரி மாதங்களில் ஆந்திரா, ஒடிஸா மாநிலங்களிலிருந்தும் கொள்முதல் செய்கின்றனர். மற்ற மாநில எள்ளைக் காட்டிலும் தமிழ்நாட்டு எள் தரம் நன்றாக இருப்பதால், மற்ற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் எள்ளோடு கலந்து எண்ணெய் எடுக்கின்றனர்.

தைப்பட்டத்தில் விதைத்த எள் அறுவடை செய்யப்பட்டு அதன் வரத்துக்கள் துவங்கியுள்ளன. சாதாரணமாக ஒரு ஏக்கர் நீர்ப்பாசன நிலத்தில் 400-600 கிலோ வரை எள் மகசூல் கிடைக்கும். ஆனால் நடப்புப் பருவத்தில் தரமற்ற விதை, பூச்சித் தாக்குதல் மற்றும் குறைவான மழை ஆகிய காரணங்களால் எள் மகசூல் ஒரு ஏக்கருக்கு 250-300 கிலோவாகக் குறைந்துள்ளது.

இப்போது தமிழக விவசாயிகள் அறுவடை செய்த எள்ளை உடனடியாக விற்பதா அல்லது சேமித்து வைப்பதா என்ற சந்தேகங்களை எழுப்பியுள்ளனர். அவர்களின் சந்தேகங்களுக்கு விடையளிக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண்மைப் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 11 வருடங்களாக சிவகிரி சந்தையில் நிலவிய விலையை ஆய்வு செய்தது. ஆய்வு முடிவுகளின் படி மே- ஜுன் 2013ல் சிவப்பு எள் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.83-88 ரூபாயாக இருக்கும். மற்றும் நல்ல தரமான எள் விதைகளுக்கு ரூ.90/- மற்றும் அதற்கு மேலும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஜுலை மாதத்தில் விலை ஏற வாய்ப்புள்ளது. இருப்பினும் பண்ணை அளவில் எள்ளை இருப்பு வைப்பது என்பது கடினமான பணியாகும். ஏனெனில் சரியான முறைப்படி இருப்பு வைக்காவிட்டால் மொத்த எள்ளும் வீணாக வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் எள் விதையை அறுவடை செய்ததும் உடனே விற்று விடும்படி பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641003.
தொலைபேசி: 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்